## ஹஜ் கடமையை நிறைவேற்றுவதில் தடையாக இருப்பவை

எவையெல்லாம் ஒருவர் ஹஜ் கடமையை நிறைவேற்றுவதில் தடையாக இருக்கமுடியுமோ அவை கீழ்வருமாறு:

1 **பெற்றோர்கள் தடையாக இருப்பது** பெற்றோருக்கு ஒருவரை நஃபிலான ஹஜ் நிறைவேற்றுவதிலிருந்து தடுக்க உரிமையுண்டு. ஹஜ் நிறைவேற்றுவதற்காகத் தாய் தந்தையரிடம் அனுமதி பெறுவது விரும்பத்தக்கதாகும்

2 **பெண் திருமணமானவராக இருப்பது** ஒரு கணவர் தன்னுடைய மனைவியை நஃபிலான ஹஜ் நிறைவேற்றுவதிலிருந்து தடுக்க உரிமையுண்டு. சில மார்க்கச்சட்ட அறிஞர்கள் கணவர் கடமையான ஹஜ் நிறைவேற்றுவதிலிருந்து தடுக்கவும் உரிமையுண்டு எனக் கூறுகின்றனர். இருப்பினும், பெரும்பாலான மார்க்கச்சட்ட அறிஞர்கள் ஒரு பெண் தன் கணவருடைய விருப்பத்திற்கு மாறாகவும் கட்டாயக் கடமையான ஹஜ்ஜை நிறைவேற்றலாம் எனக் கூறுகின்றனர்.

3 **அடிமையாய் இருப்பது** அடிமையின் உரிமையாளரான எஜமான் தன்னுடைய அடிமையை கடமையான அல்லது நஃபிலான ஹஜ் நிறைவேற்றுவதிலிருந்துதடுக்க உரிமையுண்டு.

4 **ஒருவர் அநீதியான முறையில் சிறையிலடைக்கப்பட்டு இருப்பது** அல்லது வேறு ஒரு காரணம் அவரை ஹஜ் நிறைவேற்றுவதிலிருந்து தடையாக இருத்தல்.

5 **கடன் தடையாக இருப்பது** கடன் ஹஜ் நிறைவேற்றும் வசதி படைத்த ஒருவரை, அவர் கடனாளி என்ற வகையில் ஹஜ் நிறைவேற்றுவதிலிருந்து தடுக்கலாம். இருப்பினும், ஒருவர் கால அவகாசத்துடன் திரும்பி வந்து கடனை அடைக்கும் நிபந்தனையுடன் கடன் பெற்றிருந்தால், அவர் கடமையான ஹஜ்ஜை நிறைவேற்றலாம்.

* * *

www.uzairfalahi.com